அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

18580
-89- (895)

மலர் 2 இதழ் 3	விக்ருதி௵ ஆனி மீ ஜூன்—ஜூலை—1950 ௵	விலை அணா 2½

-89- Acc. 18580.



திக்விஜயத்திற்குப் பிறகு
பிரம்மா சூரபத்மனுக்கு முடி சூட்டல்
(காந்தபுராணச் சித்திர விளக்கம்—13)

90

பொருளடக்கம்

			பக்கம்
1.	மஹாவாக்யப் பொருள்	(திருப்புகழ்மணி)	... 1
2.	சமைதாங்கி	(வித்வான் கு. நடேச கவுண்டர்)	... 3
3.	பெரும் பெயர் முருகன்	(கி. வா. ஜகந்நாதன்)	... 8
4.	ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்	(V. S. வெங்கடராமன்)	... 15
5.	கந்தர் கலி வெண்பா	(ரசபதி)	... 20
6.	பக்தியும் இசையும்	(மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை)	... 27
7.	இயற்கை யோடியைந்த இன்பம்	(வடிவேல் பிள்ளை)	... 33
8.	கம்பன் விளம்பும் விகுதி	(ராமன்)	... 38

'அமிர்தவசனி' சந்தா அறிக்கை

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா ரூ. 1-8-0 யும் மணி ஆர்டர் மூலம் அல்லது நேரில் செலுத்தவும். ஆயுள் சந்தா ரூ. 25-0-0.

சிறந்த பாராயணப் புத்தகங்களுக்கு:

பி. டி. பாணி அண்டு கம்பெனி

17, வெங்கடாசல செட்டி தெரு, திருவல்லிக்கேணி

Regd. Trademark "EVEREST" Telephone 2305

P. R. NATHAM & CO.,

High Class Stationers, Importers of Drawing Materials, Artists' Colours and Chinese Crackers

No. 2/285, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1

Sole Distributors of :—**EVEREST BRAND STATIONERY & CARBON PAPERS**

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 2	விக்ருதி ௵ ஆனி ௴ ஜூன்—ஜூலை—1950	இதழ் 3

மஹாவாக்யப் பொருள்

(திருப்புகழ் மணி)

ஸ்ரீ அருணகிரியார் அநுபூதியின் மூன்றும் செய்யுளில் "பொருள்" யாது என்று வினவுகிறார். 'பொருள்' என்பதைப்பற்றி கேட்ட கேள்வி, நிலைத்த பொருள், உள்ள பொருள், உண்மைப் பொருள், அழியாப் பொருள், இத்தன்மையான பொருளைக் குறிக்கும். இந்தப் பொருள் எதுவென்று நான்கு வேதங்களும் உபதேசிக்கும்.

உபதேச வாக்கியங்களை மஹா வாக்யங்கள் என்று மேலோர் பகர்வர். ஆதி சங்கரர் திருச்செந்தூர் முருகனை 'மஹா வாக்ய கூடம்' என்று புகழ்ந்துள்ளார். மஹா வாக்யப் பொருள்தான் முருகன் என்றார். முருகனைப் பற்றியபின் பொருள் தேட அவசியமில்லை. முருகனிடத்தில் ஈடுபட்டவர் வேத வாக்கியப் பொருளில் ஈடுபட்டவராவர்.

நெடுமதின் யாழ்ப்பா ணுபன் பட்டின மருவிய பெருமானே
உனது மெய்வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட அருளாயோ.

ரிக் வேதம்—'ப்ரக்ஞானம் ப்ரம்மம்' என்று உபதேசிக்கும். ஒரு மனிதன் நோய்வாய்ப்பட்டு ப்ரக்ஞையற்று இருக்கிறான் என்பார்கள். உடம்பினுள் சில இடங்களில் உணர்ச்சி அல்லது ப்ரக்ஞை இல்லையென்றும் மற்றப்படி உணர்ச்சி இருக்கின்றதென்றும் பேசுவது யாரும் அறிந்த விஷயமே. வேற்றுமை என்னும் நோயால், தவத்தின் இன்மையால் தன் உடம்பில் மாத்திரம் உணர்ச்சியிருக்கும். ஜகத்தின் உணர்ச்சி தனது ப்ரக்ஞையில் இருக்கின்றதில்லை. 'ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே' என்ற வாக்கியப்படி, ஜகத்தையெல்லாம் ஒன்றெனக் கருதி, தன் உணர்ச்சியை அன்பால் வளர்ப்பானாகில், ஜகத்தெல்லாம் அவன் உணர்ச்சிக்குள் வரும்படி பெறலாம். ஸ்ருஷ்டியின் நலமே தனதாகக்கொண்ட மேன்மக்கள் தெய்வத்தை ஜகத்தெல்லாம் நிறைந்த தன் ப்ரக்ஞை (Cosmic Consciousness) யிலேயே பார்த்துவிடுகின்றார்கள். இந்தத் தத்வத்தை விளக்குகின்றது முதல் வாக்யம்.

சிறு வாழ்வைத் துறந்து பெருவாழ்வைத் தம் வாழ்வாகக்கொண்ட அநுபவிகள் அநுபவிப்பதுவும் ப்ரம்மம். நான் எனும் சொல்லிறந்து உலகெலாம்நிறைந்த தனியுடன் கலந்து அநுபூதிமான்களாய் விளங்கும் ஞானிகள் அகத்தில் உறைகின்ற பரக்ஞை ப்ரம்மம். யோகியர் உள்ளத்தில் தெய்வம் எப்பொழுதும் இருந்து தூங்குவார் என்பர் ஒரு சித்தர்.

அருணகிரியார் "உலகேழும் தானாக"ப் பெற்ற நிலையில் திருப்புகழ் பாடிய பெருமையைப் போற்று

கூற்றுவனைக் காய்ந்த அபிராமி மனதார அருள் கந்தவேளே
காலன் அணுகா நின் அருளன்புதாராய்.

கின்றார். உலகத்தையே தம் சரீரமாகக் கருதும் நிலையை முருகனை வேண்டி அடைந்தார். தசரதனைக் கம்பர் வர்ணிக்குங்கால் "உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்." எல்லா உயிர்களும் தன் உடம்பில் உறைவதென்ற உணர்ச்சி பெற்றால் இந்த முதல் மஹா வாக்கியத்தின் அனுபூதி பெறலாம். உடம்பின் ப்ரக்ஞை பெற்றவன் ப்ரும்மத்தின் பிரக்ஞை பெறுதல் வேண்டும். பெற்றுவிட்டால் ப்ரக்ஞை வேறல்ல ப்ரம்மம் வேறல்ல—ப்ரக்ஞானம் ப்ரம்மம்.

சுமைதாங்கி

(வித்வான் கு. நடேச கவுண்டர்)

கடுவெய்யிலிலே தலையில் பெருஞ்சுமையோடு நெடுவழி நடப்பாரைக் கண்டிருக்கிறோம். சுமையின் கனம் கழுத்தைக் குறுக்கும். உடம்பெல்லாம் வியர்வை வடியும். மேலே வெய்யில் காயும். கீழே நிலம் சுடும். போட்டிருக்கிற செருப்பும் காலைக் கடிப்பதால் அதனையும் கழற்றிக் கையில் பிடித்துக் கொண்டு நடக்கவும் நேரிடும். அவ்வாறு நடந்து வருவோர் சற்றே இளைப்பாறவும், சுமையை இறக்கி வைக்கவும் தகுந்த இடம் எதிர்ப்படாதோ என்ற ஆர்வத்தோடே வருவர். அவர்கள் விரும்பியபடியே ஓரிடம் எதிர்ப்படுகிறது. அங்கே குளிர்ந்த மர நிழல் - இனிய தெளிந்த குளிர்ந்த நீரோடை; இளைப்பாற மரநிழலில் ஒரு மேடை - குளிர்ந்த காற்று வீசுகிறது. அவ்விடத்தைக் கண்டால் சுமைக்காரருக்கு எத்தனை மகிழ்ச்சியாயிருக்கும். சுமையை இறக்க

நாரணன் ஸ்ரீராம கேசவன் கூராழி நாயகன் பூவாயன் மருகோனே
சீதளம் பாதார மருள்வாயே.

வேறொருவர் துணை வேண்டும். பாரத்தின் மிகுதியால் தானே எடுத்துக் கீழேவைக்கவோ, மீண்டும் தானே எடுத்துத் தலைமேல் வைத்துக் கொள்ளவோ முடியாது. அங்கே ஒரு சுமைதாங்கிக் கல்லைக் கண்டான் ஒரு சுமையாளி, பிறர் உதவியில்லாமலேயே, நின்றது நின்றாற் போல கல்லின்மேல் சுமையை நகர்த்திவைத்தான்.

சுமைப் பாரத்தினின்று விடுபட்டான். ஓடையில் நீர் பருகினன். மரநிழலில் மேடையின்மேல் இருந்து இளைப் பாறினன். மரத்தின் அடியில் உதிர்ந்து கிடந்த, விலையின்றிக் கிடைத்த பழங்களை உண்டு பசியும் ஆறினன். வழி நடந்து வரும்போது தான் பட்ட வருத்தத்தையும் இப்போது நுகர்கின்ற இன்பத்தையும் எண்ணி எண்ணி இத்தகைய இன்பப் பேறு எப்போதும் நமக்குக் கிடைக்காதோ என ஏங்கினன். கிடைத்தால் அவன் களிப்புக்கு எல்லையுண்டோ?

மனிதன் வாழ்க்கையாகிய நெடுவழியில் இருவினையாகிய சுமையுடன் துயரமாகிய வெய்யில் சுட வருந்தி நடக்கின்றான். மேற்சொன்ன சுமையாள் போல இளைப் பாற விரும்புகின்றான். எங்கே இளைப்பாறுவான்? கண் பார்வை குறைந்தவன்! அந்தோ! வழிநெடுகச் சாலையோரத்தில் மரநிழல் உண்டு, சுமைதாங்கியும் உண்டு, ஓடையும் அதில் நீரும் உண்டு, கண் ஒளி குறைந்த இச் சுமையாள் அதனை அறிந்திலன். வழியையும் வெய்யிலையும் சுமையையும் தன்னையும் நொந்து கொண்டே வருந்தி வருந்தி நடக்கின்றான்.

வேட்டந் தொந்தித் தந்திப் பரனுக் கிளையோனே
நாட்டுந் தொண்டர்க் கண்டக்கமலம் பதமீவாய்.

முன்னமே மரநிழலில் இளைப்பாறி இன்புற்றிருப்போர் சிலர் அவனை அங்கே இருந்து கொண்டு அழைக்கின்றனர். "சுழலார் துயர் வெய்யில் சுட்டிடும்போது அடித்தொண்டர் துன்னும்-நிழலாவன. எங்கள் நீங்காப் பிறவி நிலை கெடுத்துக் - கழலாவினைகள் கழற்றுவ காலவனங்கடந்த - அழலார் ஒளியன காண்க ஐயாறன் அடித்தலமே" (அப்பர் தேவாரம்) என்கின்றார் ஒருவர்.

(இப்பாட்டின் பொருட் சுருக்கம்:—சுழல் காற்று வீசுகின்ற, துயரமாகிய வெய்யில் சுடும் போது, அடியார் தங்கும் நிழலாயிருப்பனவும் பிறவியின் நிலைமையைக் கெடுத்து இறக்க முடியாத வினைச் சுமையை இறக்குவனவும், ஐயாற்றப்பர் திருவடிகளே).

மற்றொருவர்,

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த குளிர்தருவே! தரு நிழலே! நிழல் கனிந்த கனியே! ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே!

உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலரே! மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே! மென் காற்றில் விளைசுகமே சுகத்திலுறு பயனே!" எனத் தாம் பெற்ற இன்பத்தை வியந்து பாடுகின்றார் முதலிலே அழைத்தவர். (அப்பர்) மீண்டும் கூறுகின்றார்.

"தமக் கன்பு பட்டவர் - பாரம் பூண்பர்....அறனெறியாரே" என்று (அன்பர்களுடைய பாரத்தை எல்லாம் தாங்கக் கூடிய சுமைதாங்கி இங்கே இருக்கிறது வா என்று) கூவுகின்றார்.

சரணார விந்தமது பாட
வண்டமிழ்வி நோத மருள்வாயே.

மற்றொருவர் (சங்கராசாரியார்) அப்பா, சுமைக்காரா! இங்கே இது பொதுவான இடம். சாதி ஆச்சிரமம், ஏழை, பணக்காரன், நல்லவன், கெட்டவன் என்ற வேறு பாடு இல்லை இங்கே வந்து இளைப்பாற வாடகையும் இல்லை; மனம் இருந்தால் போதும். உன் மனத்தை இங்கே வை. இடம் உனக்குச் சொந்தமாகும், என்ற கருத்துப்பட.

மாணவனோ மனையவனோ வனத்தவனோ
துறந்தவனோ மற்றும் வேறாய்க்
காணும் எவன் ஆனால் என்? பவசிவதன்
உளமலர் உன் கழற்கே வைத்தோன்;
பேணி அவன் வயத்தனாய் ஆகுவை நீ: சம்பு!
அவன் பிறவிப்பாரம்
பூணுவை என்றால் நினது பெருங்கருணைத்
திறம் எம்மால் புகலாமோ

சிவானந்தலஹரி 11 இந்த இடத்தைப் புகழ்ந்து தம் இன்பானுபவத்தைப் பாடுகிறார்.

அன்பர்களே! நாம் எல்லோரும் வாழ்க்கையாகிய வழி நடையாளரே. துயர்வெயில் நம்மைச் சுடுகின்றது. வினைப் பாரம் தலையை அழுத்துகின்றது. இச் சுமையின் கனத்தை என்னென்பது! இது எப்படி ஏறிற்றோ? எப்பொழுது ஏறிற்றோ? அதைப் பற்றி விவாதித்துப் பயன் என்ன? இப்போது நாமுண்டு - நம் சுமையுண்டு - இந்தச் சுமைக்குப் பெயர் பிராரத்தமாம். உடலிருக்கும் வரை இருக்குமாம். சுமை யொழிந்தால் நம் உடல் விழுந்து விடு

அனுபூதி வடிவினை யுனதழ கியதிரு வார்த்த
வாக்கால் மொழிந்து அருளவேணும்.

மாம். இது அதிசயமான சுமை. இதுதான் நம்மை நடக்க, இருக்க, கிடக்க மற்றெல்லாம் செய்யச் செய்கிறதாம். இச் சுமை ஒழிந்தால், உடல் விழுந்தால், நாம் கவலையற்று இருப்போமா? இல்லவே யில்லையாம்! வழி நடக்க நடக்க வேறு சுமை தயாராகி விடுகின்றதாம்! அதன் பெயர் ஆகாமியமாம். இவ்விரண்டே யன்றி இன்னும் தலைமேல் ஏற்றுவதற்கு மேரு மலை போன்ற சுமைக் கட்டுகள் கிடைக்கின்றனவாம். அக்குவியலுக்குச் சஞ்சிதம் என்ற பேராம். இதென்ன சங்கடம்! வினையினால் உடலாம் - உடலினால் வினையாம். இவ் வினை விளைவு தொலைவது எப்போது?

> படர்தரும் வெவ் வினைத் தொடர்பால் பவத்தொடர்பு
> அப் பவத் தொடர் பால் படரா நிற்கும்
> விடலரும் வெவ் வினைத் தொடர்பு அவ்வினைத்
> தொடர்புக்கு ஒழிபுண்டோ வினை யேற் கம்மா"
> (குமர குருபரர்)

(பவத் தொடர்பு = பிறவித் தொடர்பு) என்று புலம்புகின்றோம்.

நமக்கு முன்னே சுமை யொழிந்தோர்கள் நம்மேல் கருணை வைத்து நிழலுக்கு அழைக்கின்றார்கள். சுமை தாங்கியைக் காட்டுகிறார்கள். அப் பெரியோர்கள் அழைப்பு நம் காதுகளில் நுழையுமா? சுமை தாங்கியைக் காண்போமா? சுமையை இறக்கி வைத்து இளைப்பாறி இன்பம் நுகர்வோமா?

அனவற்ற வடிவுற்ற முகில்கிட்டினன் மருகோனே
இடர்பெற்ற ஜனனத்தை விடுவித்து எருள் அவப்ப தெரு நாளே.

காதுள்ளவர்கள் கேட்பார்கள், கண்ணுள்ளவர்கள் காண்பார்கள். இன்புற்றவர்கள் பின் வருமாறு கூறிக் களிப்பார்கள்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே —(அப்பர்)

இதன் பொருள்: நிறைந்த இளவேனிற் காலத்திலே, மாலையிலே மதியின் நிலவும், வண்டு மொய்க்கும் பூமலர்ந்த பொய்கையும், இளந் தென்றல் காற்றும், குற்றம் அற்ற வீணை ஒலியும் இன்பந் தருவது போல இன்பந்தருவது ஈசனாகிய எங்கள் தந்தையின் இரு திருவடிகளின் நிழல்.

பெரும் பெயர் முருகன்

கி. வா. ஜகந்நாதன்

திரு முருகாற்றுப்படையில் நக்கீரர் முருகவேளுக் குரிய பல திரு நாமங்களை அருச்சனை போலச் சொல்லி யிருக்கிறார். அந்தத் திருநாமக் கோவையிலே,

,,அரும் பெறல் மரபிற் பெரும்பெயர் முருக"

என்பது ஒரு தொடர். 'பிறராலே பெறுவதற்கு அரிய இலக்கணங்களை உடைய பெரிய பெயரையுடைய முருகனே!' என்பது இதன் பொருள். முருகன் எனும் திருநாமம்; அதனால் பல இலக்கணங்கள் குறிக்கப் பெறு

வறுமையாகிய தீயின்மேற் கிடந்து
தேவிப்பு நீள்புழு வாயினேற் கிரங்கி அருள்வாயே.

கின்றன; அவ்விலக்கணங்கள் அனைத்தும் ஒருங்கே உடையவன் முருகன்; பிறரிடம் அவை அனைத்தும் ஒருங்கே இலாமையால் அத்திருநாமம் பிறரால் பெறுவதற்கு அரிதாயிற்று.

முருகன் என்ற திருநாமம் முருகு என்றும் நிற்கும். திரு முருகாற்றுப்படை என்னும் நூற்பெயரில் முருகு என்ற சொல்லே இருக்கிறது. திரு - முருகு - ஆற்றுப் படை எனப் பிரியும். "வாழிய முருகே" என்று நற்றிணை கூறுகிறது. "முருகாற்றுப் படுத்த உருகெழு வியனகர்" என்று திரு முருகாற்றுப்படையில் ஓரடி வருகிறது. அங்கும் முருகனைக் குறிக்க முருகு என்ற சொல்லே அமைந்துள்ளது.

முருகு என்னும் சொல் தனித் தமிழ்ச் சொல். தமிழ் எழுத்துக்களின் மூவினமும் இச் சொல்லில் அமைந்துள்ளன. மு - என்பது மெல்லினம்; ரு - என்பது இடையினம்; கு - என்பது வல்லினம். தமிழர் சிறப்பாக வைத்துப் போற்றும் தமிழ்க் கடவுளாகிய வடிவேற் பெருமானுடைய திருநாமம், தமிழ் எழுத்துக்களிலுள்ள மூவினத்தினின்றும் எழுத்தைப் பெற்றிருத்தல் பொருத்தமானதே.

முருகன் என்பதற்கு முருகை உடையவன் என்பது பொருள். முருகு என்பதற்குப் பல பொருள்கள் உண்டு. அவற்றுள் தலைமை பெற்றவை நான்கு. நறுமணத்தை முருகு என்னும் சொல்லால் குறிப்பர். தெய்வத் தன்

அறிய அறிய அறியாத அடிகளறிய அடியேனும்
அறிவு வறிவு மறிவூற அருள்வாயே.

மைக்கு முருகு என்பது ஒருபெயர். அழகையும் இளமையையும் குறிப்பதற்கு முருகு என்னும் சொல்லை ஆள்வர். மணம், தெய்வத்தன்மை, இளமை, அழகு என்னும் நான்கு பொருள் முருகு என்னும் சொல்லுக்கு உண்டு. இந்த நான்கு முருகுகளில் வடிவேற் பெருமான் எந்த முருகை உடையவன்? இந்த நான்கு முருகுகளையும் உடையவன். முருகு என்னும் சொல்லுக்கு உரிய பல பொருளும் முருகனுடைய பண்புகள். அவன் நறுமண முடையவன்; தெய்வத் தனமையிற் சிறந்தவன்; என்றும் மாருத இளமையுடைவன்; என்றும் நீங்காத அழகை உடையவன்.

முருகன் திருமேனி தூய்மையுடையது; ஞானமணம் கமழ்வது.

"கந்தமிகு நின்மேனி"

என்று அருட்பிரகாச வள்ளலார் பாடுகின்றனர்.

அவன் தெய்வத்தன்மையிலே சிறந்தவன். தெய்வத் தன்மையுடையவர்களைத் தேவர் என்பர். அவருக்குள்ளே பெரிய தேவன் சிவபெருமான். அதனால் அப் பெருமானுக்கு மகாதேவன் என்ற திருநாமம் வந்தது. அந்தப் பெருமானுக்கும் நாதனாக, தெய்வமாக முருகன் இருக்கிறான், 'சரவண தகப்பன்சாமி' என்று அருணகிரி நாதர் பாடுவார்

"தேவ தேவ தேவாதி தேவப்பெருமாளே"

என்பது திருப்புகழ். சுப்பிரமணியன் என்ற திருநாமமும் பிரமத்தின் இயல்புடையவர்களுள் உயர்ந்தவன் என்பதையே உணர்த்தும். சாமிநாதனாகிய முருகன், கண்

சாம வேதியர் வானவரோதி நாண்மலர் தூவிய
தாளில் வீழ விளுமிக அருள்வாயே.

கண்ட தெய்வமாகிய செவ்வேள், தெய்வத் தன்மையிலே சிறந்தவனாக விளங்குகிறான் என்பது இவற்றால் விளங்கும்.

முருகன் என்றும் இளமையுடையவன். பாலன் என்ற திருநாமம் உடையவன்.

"என்றும் இளையாய்"

என்று பழம் புலவரும்

"என்றும் அழியாத இளமைக்கார"

என்று அருணகிரிநாதரும்' பாடுகின்றனர். குழந்தை வடிவேலன், குழந்தை என்னும் வழக்காறுகளும் இக் கருத்தைத் தெளிவிக்கும்.

முருகன் அழகுடையவன் என்பதைப் பல அன்பர்கள் பலவாறு கூறியிருக்கின்றனர். குமாரன் என்ற திருநாமமே அவனுடைய பேரழகைக் குறிக்கும். 'மாரனைக் குற்சிதம் செய்யும் அழகுடையான்' என்று அதற்கு அறிஞர்கள் பொருள் உரைப்பர். கந்த புராணத்தில், முருகவேளின் திருவுருவத்தைத் தரிசித்த சூரபன்மன் கூறுவதாக ஒரு பாட்டு உண்டு.

"ஆயிரம் கோடி காமர்
அழகெலாம் திரண்டொன் றாகி
மேயின எனினும் செவ்வேள்
விமலமாம் சரணந் தன்னில்
தூயநல் எழிலுக் காற்று
என்றிடின் இனைய தொல்லோன்
மாயிரு வடிவுக் கெல்லாம்
உவமையார் வகுக்க வல்லார்."

ஆயிரங்கோடி மன்மதர்களுடைய அழகு ஒன்று திரண்டாலும், முருகன் திருவடியழகுக்கு ஈடாகாதென்று சூரன் சொல்லுவதாக அமைந்தது இப்பாட்டு. பகைவனே

செகடபபடி தோற்றிய பார்வதி மருள்பாலா
பாகதி பெற்றிட நோக்கிய பார்வையு மற்றவேனே

இவ்வாறு போற்றுவதானால் அப் பெருமானுடைய திரு மேனியழகு எப்படி இருக்க வேண்டும்?

மணமும் தெய்வத்தன்மையும், இளமையும், அழகும் ஒருங்கே உடைமையால் முருகன் என்னும் திருநாமம் செவ்வேளுக்கு அமைந்தது என்ற உண்மையை நக்கீரர் ஓரிடத்தில் குறிப்பாகச் சொல்கிறார். முருகன் தன்னைத் தேடிவந்த புலவனுக்குத் தரிசனம் தந்தருளுவான் என்று கூறுகிறார்கள் புலவர். இன்ன உருவத்தோடு எழுந்தருளு வான் என்று குறிப்பிடும்போது இந்த நால்வகைப் பண்பு களையும் தெரிவிக்கிறார்.

"........பண்டைத்தன்
மணம் கமழ் தெய்வத்து இளநலம் காட்டி."

என்பது அவர் வாக்கு. அவன் புலவனுக்குக் காட்டும் திருக் கோலத்தில் மணம் கமழும்; தெய்வத்தன்மை இலங் கும்; இளமை தவழும்; நலம் ததும்பும்; நலம் என்பது அழகு. இறைவன் முருகனை எழுந்தருளுகிறான்; முரு குடையவனைக் காட்சி தருகிறான்; முருகு என்னும் சொல்லினால் சிறப்பாகக் குறிக்கப் பெறும் மணம், தெய் வத்தன்மை, இளமை, நலம் என்ற நான்கு பண்புகளையும் உடையவனை வருகிறான். இந்த முருகத் திருக்கோலம் இறைவனுக்கு இயல்பானது; அநாதி காலமாக இருப்பது. ஆதலின் "பண்டைத்தன்" என்று சிறப்பித்தார். முரு கன் என்னும் சொல்லுக்குரிய பொருளை முருகாற்றுப் படையில் உள்ள இந்த அடி புலப்படுத்துகிறது.

இந்த நான்குவகை இயல்புகளும் உடையார் பிறர் யாரும் இலராதலின், அவ்வியல்புகளைக் குறிக்கும் இந்

அறுமுகம் ஒளிவிட வந்து நான்மறை
உபநிட மதனை விளக்க நீ அருள் புரிவாயே.

காமம் பிறரால் பெறுவதற்கரிதாகவும், முருகனுக்கே அமைந்ததாகவும் ஆயிற்று. பெறலரிய மரபையுடைய பெரும் பெயர் இது.

முருகன் என்னும் சொல்லில் நான்கெழுத்துக்களே உண்டு. ஒற்றை நீக்கிக் கணக்கிடும் சம்பிரதாயப்படி பார்த்தாலும், விளியாகக் கொண்டபொழுதும் மூன்று எழுத்துக்களே இத் திருநாமத்தில் உண்டு. மூன்று எழுத்துக்களால் ஆன மந்திரம் போன்றது 'முருக' என்னும் சொல். எழுத்துக்கள் மூன்றே ஆன இத்திருநாமம் 'பெரும் பெயர்' என்று கூறுவதற்கு ஏற்றதா? சிறிய திருநாமம் அல்லவா இது? ஐந்தெழுத்து, ஆறெழுத்து, பன்னிரெழுத்து என்றெல்லாம் பேசும் மந்திரங்களும் திருநாமங்களும் இருக்க இந்த மூன்றெழுத்துப் பெயரைப் பெரும் பெயர் என்று சொல்லலாமா?—இவ்விஷயத்தைச் சற்றுப் பார்க்கலாம்

பெரும் பெயர் என்பதிலுள்ள பெருமை எழுத்துப் பெருக்கத்தைக் குறிப்பிடவில்லை. உருவினால் சிறியனேனும் அகத்தியன் பெரு முனிவரன் ஆனான். அது போல் பொருட் பெருமையால் இது பெரிய பெயராயிற்று, அன்றியும் நால் வகையான பொருளைக் குறித்து, நால் வேறு பெயர்களால் குறிப்பதற்குச் சமானமாக அமைவதனால் இந் நாமம் ஒன்றில் நான்கு அடங்கியதாகிறது; அதற்கு மேலும் அடங்கியதாகவும் கொள்ளலாம். ஒரு பெயரே பல பெயராக விரிவதற் கேற்பதென்றால் அது பெரும் பெயர் என்பதற்கு ஏற்றதே அன்றோ?

ஆவிதனர் வுற்று வாடுமெனை நித்தம்
ஆசை கொடு அணைக்க வரவேணும்

அதனால்தான் அதனை ஒரு முறை கூறினாலும் பெரும்பயன் கிடைக்கும் என்று பெரியோர் கூறினர்

அஞ்சு முகந்தோன்றின் ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என் றோதுவார் முன். (பழம் பாடல்)

முருகா என ஓர் தரமோதடியார்
முடிமீ திருதாள் — புனைவோனே (திருப்புகழ்)

ஒரு பெயரானாலும் முருகா என்னும் திருநாமம் பல திருநாமங்களாகவே கொள்வதற்குரியது.

'விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள்; மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணை முருகா எனும்
நாமங்கள்''

என்பது கந்தரலங்காரம். "முருகா எனும் நாமங்கள்'' என்று அருணகிரி நாதர் கூறுகிறார். முருகா என்ற ஒரு நாமத்தையே நாமங்கள் என்றார். பல பொருள்களில் வரும்போது அது பல சொற்களாகவே எண்ணுதற்குரியது. பல நாமங்களாகவே பொருளும் பயனும் உடையது. ஆதலால் பன்மையாற் கூறினார். இத்தகைய சிறப்பை யெல்லாம் உடையது முருகா என்னும் நாமம். ஆகவேதான் நக்கீரர், "அரும்பெறல் மரபிற் பெரும் பெயர் முருக'' என்று கூறுகிறார்.

மனமகிழ் குமரா எனவுன திருதாள்
மலரடி தொழுமாறு அருள்வாயே.

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

14-ஆம் மை

V. S. வேங்கடராமன்

பாவிகளைக் கண்ட புண்ணியவான்

"மகதி" என்ற வீணையை மீட்டிக்கொண்டு ஹரிநாம ஸங்கீர்த்தனஞ்செய்து கொண்டே யக்ஷலோக மார்க்கத்தில் வந்துகொண்டிருந்தார், நாரத மகரிஷி.

உலக பாலகர் மக்களா இவர்

இடம் கங்கைக்கரை. பக்கத்தில் வெள்ளி யங்கிரியோடொட்டின அழகிய பூங்காவனம். குஹ்யகமகளிரும், யக்ஷிணிகளும் மதுபானத்தால் மிக அழகான குரலுடன் முதலிற் பாடும் இரண்டு ஆடவரது பாடல்களைத் தொடர்ந்து சேர்ந்து பாடுகின்றனர். அகஸ்மாத்தாக வந்த நாரதர் இரண்டு ஆடவரையும் உற்று நோக்கினார். ஸ்ரீ ருத்ரனுடைய வேலைக்காரர்கள் அல்லவோ இவர். குபேரனுடைய பிள்ளைகள். மிகக் கொழுப்பேறினார் இவர். மிதமிஞ்சிய மதுபானத்தால், இடுப்பில் ஆடை இல்லாததனையும் நினைக்கவில்லை. இந்தத் தாடிமகரிஷி நம்மை என்ன பண்ண முடியும் என்ற எண்ணத்தை இவர் கண்களே காட்டுகின்றன. இவர்கள் பறித்தெறிந்து விளையாடிய தாமரை மலர்களும் மொக்குகளும் நீரில் மிதந்து செல்கின்றன. இந்தப் பெண்கள் விரைவில் தெரிந்து கொண்டு இடுப்பில் புடைவைகளைச் சுற்றிக் கொண்டனரே. இவர்கட்குத் தனமதமே தலைக் கேறியது, இருக்கட்டும்.

செல்வச்செருக்குக் குருட்டு நோய்க்குத்
தாரித்திரியமே சித்தாஞ்சன மருந்து, மை

அலையும் வேலையும் அலறிட எதிர்பொரு மயில்வீரா
நின் ஆறிரு புயமென வுரைசெய அருள்வாயே.

பணம் வந்துவிட்டவர் கர்வம் ஏறினலோ பெண்களின் பித்தும், சூதாடுதலும், மதுபானமும், கூடவே வருகின்றன. தேகத்தை ஆத்மாவென்று எண்ணுபவன், யௌவன மதம், ரூப மதம், வித்யா மதம், தன மதம், குல மதம் எல்லாங் கொள்ளுபவனுவன்.

கண்ணிருந்தும் அகங்காரமும் மதமும் இல்லாத ஏழை **குருடு** ஒருவன் தெய்வச் செயலாய்க் கஷ்டத்தை அடைவதே அவனுக்குத் தவமாகிறது. தரித்திரனுக்கு ஐம்பொறிகளும் ஒடுங்குகின்றன. அன்னம் ஒடுங்கினல் அஞ்சும் ஒடுங்குமன்ருே. ஸாதுக்கள் ஏழைகளோடு சேர்வர். நல்லோர்களால் அவ்வேழை ஆசையைப் போக்கிக்கொண்டு சுத்தனுகி முக்தியடைகிருன். நல்லோர்களுக்குத் தீயோர்களால் நிறைவேற வேண்டுவதொன்றுமேயில்லை. இந்த நள கூபர; மணிக்கிரீவர்களுடைய தமோகுண மதத்தைப் போக்கப் போகிறேன்

ஆதலினல் தெய்வவ்ரு டங்கள் நூறும்
அருச்சுனமாய் அறிவுடன் நீர் நிலத்தின் ஓங்கி
மாதவன்றன் அருள்பெற்று வருவீரென்று

நாரதமுனிவன் அவ்விருவரையும் மருத மரங்களாகச் சபித்துத் தன் வழியே சென்றனன். அந் குபேரன் மக்கள் உடனே அவ்வாயர்பாடிக்கு அருகில் மருத மரங்களாகிக் கண்ணன் வரவை எதிர்பார்த்து நின்ருர்கள்.

அடியவர் மொழியை மெய்யாக்க ஆண்டவனின் அவசரம்

அளகாபுரி அரசனுன குபேரனது அருமைப் புதல்வர் இருவரும் மருத மரமாய் நின்ற இடத்தின் அருகே

அச்சுதன் மருகக் குமரேசா
மனக்கவலை ஒழித்து அருள்வாயே.

கால் விரல்களால் காளையர் இருவர் தோன்றிய அதிசயம்

சென்று உரலிற் கட்டுண்ட உடம்போடு, முன் இராமாவதாரத்தில் பாததூளியால் பாவை யொருத்தியைப் படைத்தேன். அதற்குமுன் பாதத்திலேயே கங்கைநதிப் பாவையைப் படைத்தேன். இப்போது பாதங்களின் விரல்களால் பாதபங்களை (மரம்)ப் பெயர்த்து அவர் பாவங்களை நீக்கிக் காளையராக்கிக் களிப்பூட்டுகிறேன் என்று அந்த இரண்டு மருத மரங்களின் நடுவே புகுந்து மலரடி விரல்களால் சுண்டுஞற்போல அம்மரங்களை உந்தினர். மரங்கள் இரண்டும் விழுந்தன. ஆங்கு மாறுத யௌவனமே படைத்த இரு தேவகுமாரர் தோன்றினர். அவர்களின் அஞ்ஞானம் நீங்கியது. ஞானமுற்று வணங்கினர். ஆடினர் களியுற்றனர். கண்ணீர் உகுத்தனர். உடல் புளகித்தனர். பின்வருமாறு துதித்தனர்.

நீர் எரி கால்நிலன் வானம் ஐந்துங்கூட
ஐயைந்து தத்துவமாய் நிறைந்து நின்ற
பேருருவுங் கருமமுமாய் உயர்ந்தசோதிப்
பெருமையனுப் பிரமன் முதலாய தேவர்
ஆரும் உனை அறியார்கள் அவர்தஞ் செய்கை
அறிதி நீ என மறைகள் அறையா நிற்கும்
சீரில்குணந் தீவினையோம் ஆகின்றோம்
தேவ! உனை யெம்மால்தான் தெரிக்கலாமோ.

ஹே பரம கல்யாண! உம்மை வணங்குகிறோம். ஹே பரம மங்கள! உமமை வணங்குகிறோம். ஹே கிருஷ்ண கிருஷ்ண! மஹா யோகியே! உம்மை வணங்குகிறோம் உம்முடைய ஏவலாளனை குபேரனது புதல்வர்கள்,

---

ஆசை கூரு நண்ப என்று மாம யூர கந்த என்றும்
ஆவல் தீர என்று நின்று புகழ்வேனே.

நாங்கள் உம்மடியார்க்கடியாரன்றோ யாம். நாரதமாமுனிவரது அநுக்கிரகத்தினால் உங்கள் திருச் சொரூப தரிசனம் எங்கட்குப் பாக்கியமாகக் கிடைத்தது. எங்கள் வாய் உம்மையே புகழுக. எங்கள் காதுகள் உம் திருக் கதைகளைக் கேட்க. எம் கைகள், உம் பூஜையைச் செய்க. எம் மனம் உம் சேவடிகளை நினைக்க. எம் தலை உங்களுக்கு இருப்பிடமான உலகத்தை வணங்குக. எம் கண் உமது திருவுடம்புகளான நல்லோர்களைக் காண்க. எங்கட்கு விடையருளுக, என்று அவரிருவரும் வேண்டக் கண்ணபிரான் உரலிற் கட்டுண்டவண்ணமே, அக் குபேர புத்திரரைப் பார்த்து உங்கட்கு என்னிடம் பக்தி உண்டாகி விட்டது. நான் தெரிந்துகொண்டுதான் உங்களது மரப் பிறவியை நீக்கி அருளினேன். வீடுபோய்ச் சேருவீராக, என்று திருவாய் மலர்ந்தருளினார். பின் அவர்கள் கண்ணனைப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கி விடை பெற்றுக் கொண்டு அளகாபுரி சென்றனர்.

இவனாவது? மரங்களைத் தள்ளவாவது? என்ற அஞ்ஞானம்

இடி விழுந்தாற்போல மரங்கள் அதிர்ந்து விழவே இடி எங்கே விழுந்ததோ பார்ப்போம் என்று அம் மருத மரங்கள் விழுந்த இடத்திற்குக் கோபிகைகளும் கோபாலர்களும் ஓடிவந்தனர். கண்ணனோ உரலிற் கட்டுண்டு இருக்கிறான். எந்த ராக்ஷஸனோ மரங்களைச் சாய்த்திருக்க வேண்டும். கண்ணன் மரத்தடி படாமலிருக்க மாயவன் காப்பாற்றினான். இது ஏதோ கெட்ட காலத்திற்கு அடை

யாவு மாய் மனங் கடந்த மோன வீட டைந்தொருங்கி
யான் அவாவடங்க என்று பெறுவேனே.

யாளம், என்று சொல்லிக் கொண்டார்கள். அங்கே நின் றிருந்த சிறுவர், எங்கள் கண்ணாலே பார்த்தோம். கண் ணன்தான் மரங்களை முறித்தான். இரண்டு மரங்களி லிருந்து இரண்டு தேவ குமாரர்கள் தோன்றினர்கள்; துதித்தார்கள்; மறைந்தார்கள் இம் மரங்களின் நடுவில் தான் கண்ணன் உரலை இழுத்துச் சென்றான், என்று சொன்னார்கள். அவற்றைக் கேட்ட அந்த ஆயரிற் சிலர் இது முழுப் பொய் என்றார்கள். சிலர் இருந்தாலும் இருக்க லாம் என்று சந்தேகம் கொண்டார்கள்.

நந்தகோபர் கண்ணபிரானைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே அவ்வுரலிற் கட்டிய கட்டை அவிழ்த்து விட்டார். அவிழ்த்துவிட்டதும் கண்ணன் சிரித்துக் கொண்டே உடம்பையாட்டிக் கைத் தாளம் போட்டுக் கொண்டு மெல்ல மெல்ல நடந்து பிறகு வேகமாக ஓடினர். யசோதையும் உரோகிணியும் கொல்லென்று சிரித்தார்கள்.

தானே ஆட்டுவிப்பான் ஆட்டுவிப்போர்க்கு ஆடுவான்

ஒரு சமயத்தில் கோபிகைகள் கண்ணன் முன்னே தங்கள் கைகளைக் கொட்டிக் காட்டிக் "கொட்டடா கண்ணா-கை-கொட்டடா கண்ணா" என்று

குழந்தைகளின் கொஞ்சிக் கேட்கக் கண்ணபிரானும் சும்மா செயல்கள் கை கொட்டிக் காட்டினர். ஆடடா என்ன ஆடினர். பாட்டுப் பாடுவையோ என்னப் பாடினர். உரத்துப் பாடு என்ன உச்சதமஸ்தாயி யில் பாடினர். ஆசன பீடத்தையும், மரத்தால் செய்த படிகளையும், பாதுகைகளையும், பாத்திரங்களையும், கொண்டுவா என்று ஒவ்வொன்றையும் ஒவ்வொருவராக

அடியவர் இடர்கெட அருளிய பெருமானே
உயர் தானது அடைவது தவமிக நீனைவது தருவாயே.

சுட்டிக்காட்ட அவற்றைக் கொண்டுவர முடியாதவர் போலக் கையால் எடுப்பார், முக்கிக்கொண்டு தூக்குவார். நடுவில் கொண்டுவந்ததை வைத்துவிடுவார். தம் தாய் மார்களைப் பார்த்து அவர்களை மகிழ்விக்கத் தம் கைகளை உதறிக் கொள்ளுவார், இப்படியெல்லாம் பகவானுன ஸ்ரீ கோபாலமூர்த்தி "நான் பக்தர்கள் சொன்னபடி கேட்டு நடப்பவன்" என்பதைப் பகவானது பெருமையை அறிந்தவர்களுக்கு உண்மையாக்கிக்கொண்டு குழந்தை களின் செயல்களால் கோகுலத்திற்கே ஸந்தோஷத்தை உண்டுபண்ணி வந்தார்.

கந்தர் கலிவெண்பா

(ரசபதி)

நீரில் மீன்கள் நீந்துகின்றன. காற்றைப் பிளந்து எவரும் கடப்பர். இது என்றுமுள்ள நிலை: அது போல், வினையின் வினைவெள்ளத்தில் நீந்தி உயிர்கள வேதனை யுறுகின்றன. அலைகளால் அவைகள் நிலை குலைகின்றன. பெருகியும் சுருங்கியும் இயங்கும் நினைவுகள், இருவகை யாகியிருக்கின்றன. ஒன்று தீ நினைவு; மற்றொன்று நல் நினைவு. தீ வினையின் விளைவு பாவம்; நல் வினையின் விளைவு புண்ணியம். பாவத்தின் பயன் பாழ் நரகம் புண்ணியத் தின் பயன் சுவர்க்கம. நரக அநுபவம் துன்பம்; சுவர்க்க அநுபவம் இன்பம். சொர்க்கநரகப் பயன்களை யிம்மையில் பெறுவார்கள்; மறுமையிலும் காண்பார்கள் மக்கள். இன் பத்தில் துன்பம்; துன்பத்தில் இன்பம் தோன்றுவதும் உண்டு,

---

அழகுடை யாள்மெய்ப் பாலுமை யருள்பாலா
ஓர் அருள் புரிவதுதான் எப்போதது புகல்வாயே.

உடலில் மறை பொருளாய் இருக்கின்றது உயிர். அதுபோல், உயிர்கள் செய்துள பாவ புண்ணியங்களும் உருத் தோன்றுதுள்ளது. அநுபவித்தாலன்றி அவைகள் அழியுமாறில்லை. அதுவரை துன்பத்திற்கு ஏதுவான இறப்பும் பிறப்பும் இருக்கும். மாதங்களும் வருடங்களும் வந்து வந்து போதல் போல், இறப்பும் பிறப்பும் மாறி மாறி வரும். இதனால் கண் கலங்கி, இடையறாது ஆன்மா ஏங்கும். அந்நிலை கண்டு, ஆன்மாவின் கன்மக் கட்டறுக்க எண்ணுகின்றான் கார்த்திகேயப் பெருமான்.

இயற்கைக் கருணையன் அந்த இறைவன். செய்தாரைச் சென்றடைய வினைகளை உயிரில் சேர்ப்பிக்கின்றான்; அவைகளின் பயனை விரைந்து அநுபவிக்க செய்கிறான்.

நரக தண்டனையும் சுவர்க்காதி போகமும் வினைக் கேற்றவாறு விளைபவை. இங்ஙனம் பட முடியாத துன்பம் பட்ட உயிர்க்கு, வாழ்க்கையில் வெறுப்பு வரும். இந்த வெறுப்பு, விடுதலை சிந்தனையை விளைவிக்கும். அச் சிந்தனையிலிருந்து, பிறப்பழிக்கும் நல்லறிவு பிறக்கும். உயர்ந்த அந்த அறிவு, சமய வேட்கையை உண்டாக்கும்.

புலால் விழிக்குப் புலனாகாத எதையும் யாம் நம்ப மாட்டோம். பதி பசு என்பதெல்லாம் பொய், உலகம் ஒன்றுதான் உளது. சுவர்க்க நரகம் என்பதொன்று இல்லை. இனிது ஓடி, இனிய உணவுண்டு, இனிமையில் உறவாடியிருப்பதுதான் சுவர்க்க நிலை. வறுமையினால் நோயினால் வருந்துதலே நரகம். அழகிற் சிறந்து, அணிபல அணிந்த அரிவையருடன் கூடி யின்புறுதலே முத்தி

உன் வழிவழி யானெ னுவயர்
துலையல மாறு போனுயிர் சுழல்வேனே.

என்று கூறும் உலகாயத சமயம். இது பாமர மார்க்கம் எனப் பெறும். இதனில் பற்று வைத்த உயிர்க்கு, இன்ப சாகர மடல் முதலிய காம சாஸ்திரங்கள் கை தருகின்றது.

வர வர அம் மார்க்கத்தில் ஆன்மாவிற்கு ஐயுறவு வளரும். இரும்பைக் காந்தம் இழுக்கின்றது உண்மை. ஆனல், அது இழுக்கப்படும் நிலை நம் புறவிழிக்குப் புலனாக இல்லையே! இதனால், புறக்கண்களுக்குப் புலனாகாத சூக்கும செயல்கள் உள எனல் தெரிகிறதே. இன்று யாமெழுப்பு விவாதம் அனைத்தும், அன்னையின் கருவறையில் இருந்த போதா கற்று வந்தோம்? பிறந்து வளர்ந்த பின், உரைப்பார் சொல் கேட்டு, பேசப் பழகிய பின்னல்லவா இந்த விதண்டாவாதம் செய்கிறோம். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்னும் நம் கொள்கை பொருந்துவது தானோ? கனாக் கண்ட கண் எந்தக் கண் என்பது முதலிய ஐயம் பலவும் எழுந்து அந்த ஆன்ம இதயம் அலைமோதும்.

அதன் பின் லோகாயதத்திற்கு அயலான ஆறுதல் அளிக்கும் சமயம் பிறிது இல்லையோ என்று முயன்று தேடும். முயல்வின் பயனாகப் புலனான பௌத்தம், ஆருகதம், மீமாம்சகம், மாயாவாதம் முதலிய புறச் சமயங்கள் ஒவ்வொன்றிலும் புகும், அங்கங்கு உரைக்கும் ஒழுக்கம் கொண்டு உயரும்.

புண்ணிய வினையால் புறச்சமயங்களினின்று நீங்கும்; சைவம் சாரும்; பாசுபதத்தில் பயிலும்; வாமத்தில் வைகும்; வைரவத்தில் மன்னும்; மா விரதம் தாவும்; காளா

சிவகாம சுந்தரி பேதரு பாலக
வரந்தருவாய் அடியேனிடர் களைவாயே.

முகத்திற் கலக்கும்; தனித் தனி யாகவுள்ள சூக்குமமான இந்த அகச் சமயம் ஆறனையும் தழுவும்; பயிலும் அவ்வச் சமய நூல் வழியே படரும்.

அதன் மேல், மனு முதலிய மேலோர் வகுத்த பதி னெட்டு அற நூல்களில் பழுக்கும். நான் மறை கூறும் பிரமசரியம் முதலிய ஆச்சிரமங்கள் நான்கிலும் நயப்படை யும். ஐந்தீ நடுவில் அருந்தவங்கள் செய்யும்.

கற்பதற் கரிய கலை ஞானம் பல கற்கும். உயர்தரும் வேதம் நான்கும் ஓதும். பதினெண் புராணங்களையும் படித்து உணரும். அரிய உபநிடதங்களை ஆராய்ந்து தெளியும்.

இத் தெளிவு பிறக்க எத்தனை முயற்சி? எத்தனை பிறப்பு? அம்மா! நினைத்தாலும் நெஞ்சம் அஞ்சுகிறதே! தெளிவு பிறந்த பின் அருள் நூல்களின் நுட்பமெல்லாம் தெரியும். அந்நூற்கள் வகுத்த விரதங்களை யெல்லாம் அதன் பின் அநுட்டிக்கும் ஆன்மா, அற நெறியில் காண் தரு தவ நெறியிற் காலூன்றி நிற்கும்.

'**தலைவா! உன்னை வேண்டிக் கொள்வேன் தவ நெறியே'** என்னும் **ஆளுடைய நம்பிகளின்** வேண்டுகை, இங்கு நம உள்ளத்தை அள்ளுகின்றது.

கனிவு விளைவிக்கும் அத்தவம், மெய்ச் சமயத்தைக் காட்டும். அதுதான் சித்தாந்தம். அதற்கு மேலொரு முடிவில்லை.

மாண்புடைய அறிகருவிகட்குத் தலைமை தாங்கியுளது மனம். அந்த மனம் வயப்படில் அருள் வசப்படும்; அதன்

நார் சுராதிபரும் வணங்கும் இனிய சேவைதனை விரும்பி நலன தாக அடிய னென்று பெறுவேனோ.

பின் எந்த இடையூறும் இல்லை; எப் பொருளும் வசமாம் என்று கூறுகிறது சித்தாந்தம்.

மனம் வயப்படும் வழிகள் பல; அவற்றுள் நலஞ் சிறந்த வழி நான்கு; சரியை, கிரியை, யோகம் மூன்றும் படிக்கிரமங்கள்; இவைகளின் இறுதியில் மெய்ஞ் ஞானம் விளையும். மெய்ஞ் ஞானம் மெய்ப் பொருளில் இமைவிக்கும்.

சிவப் பிரீதியான நந்தவனம் செய்தல்; மலர் பறித்தல், மாலை கட்டல், அருள் நூற்களை ஓதல், உரைத்தல், கேட்டல், சிவாலயத்தை அலகிடல், மெழுகிடல் விளக்கேற்றல், அடியார்க்குத் தொண்டு செயல் முதலிய புறத் தொழில் மாத்திரமாக இறைவன் உருவத்திருமேனியை வழிபடல் சரியை நெறி

கால்கள், கைகள், முகம் கழுவல் எனும் பஞ்ச சுத்தி செய்து, உள் முகமாக இறைவனை புணர்ந்து, பிறகு திரு மஞ்சனம், சந்தவர்க்கம், மணங்கமழ் தூபம், தீபம் மலர் முதலியன கொண்டு அகம்புறம் இரண்டாலும் இறைவன் அருவுருவத் திருமேனியை ஆராதித்தல் கிரியை நெறி.

அகத் தொழில் மாத்திரமாக இறைவன் அருவ மேனியை ஆராதிப்பது யோக நெறி.

இயமம், நியமம, ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணம், தியானம் சமாதியென எட்டங்கம் உடையது இந்த யோக நிலை.

பொய் புகலாமை; தீங்கிழையாமை; களவு செய்யாமை; பிறர்பொருள் விழையாமை; பெண்ணிச்சை பெருகாமை; எவரையும் பகையாமை இயமம்

தண்டமிழின் மிகுநேய முருகேசர
மகிழ் கூறமைந்து மயிலுடனடி வரவேணும்.

கோபமின்மை, பொறுமை, தயை, திருப்தி, நீராடல், வழிபாடு, குருமொழி அடியார் மொழிகளை யன்போடு கேட்டல் நியமம்

மான் தோல், புலித் தோல் முதலிய நல்லாசனங்களுள் ஒன்றன் மிசை யிருத்தல் ஆசனம்; (பிற கூறுவதும் உண்டு)

மூச்சை யிடது நாசி வழி 16 மாத்திரை உள் வாங்கி 64 மாத்திரை உள் நிறுத்தி, வலது நாசி வழி 32 மாத்திரை வெளியில் விட்டு; மீட்டும்

சுவாசத்தை வலது நாசி வழி மேற் சொன்னபடி வாங்கி உள் நிறுத்தி, இடப்புற நாசி வழி விடுதல் பிராணாயாமம்.

இப் பிராணாயாமம் செபம் தியானத் தொடு சேரின் சகர்ப்பம் எனவும், இன்றேல் அகர்ப்பம் எனவும் பெயர் பெறும்

ஐம்புலன்களையும் வெல்லல் பிரத்தியாகாரம்.

இறைவன் திருவடிகளை யிதயம் தங்க வைத்தல் தாரணை.

தங்க வைத்த திருவடிகளைச் சதா சிந்தித்தல் தியானம்.

விடயங்களை யெல்லாம் அறவே விட்டு, இறைவன் தனக்கு அயலா யில்லை யெனும் ஒரு பாவனை நிலை சமாதி.

'வெங்கிரய

சோர்க்காதி போக மெல்லாம் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்காரணம் சிறிது நண்ணுதலும் — தர்க்கமிடும்
தோன்னூல் பரசமயந் தோறும் அதுவதுவே

சந்ததமும் அடியார்கள் சிந்தையது குடியான வடிவேலா
இன்பமுற மகிழ்கூற மைந்துமயிலுடனடி வரவேணும்.

**நன்னூ லெனத் தெரிந்து காட்டுவித்து — முன்னூல்
விரதமுத லாய பல மெய்த்தவத்தின் உண்மைச்
சரியைகிரியா யோகம் சார்வித்து**

[*நிரயம்-நரகம், சொர்க்கம்-தேவலோகம். போகம்-அநுபவம். (துய்ப்பித்தல்-நுகர்வித்தல்; அநுபவிக்கச் செய்தல்.) காரணம்-அறிவு. தர்க்கம்-தன் சொல்லே தக்கதென மோதுகின்ற வாதப்போர். தொன்னூல்-பழைய நூற்கள். பரசமயம்-புறச் சமயங்கள். நன்னூல்-நலம் தரும் வீட்டு நூல். காட்டுவித்து-ஸ்தாபித்து. முன்னூல்-முதன்மை பொருந்திய அருள் நூல். சார்வித்து-சாரச் செய்து.*]

பாவத்தின் பயனாக நரகத்தையும், புண்ணியத்தின் பயனாக சுவர்க்கத்தையும் அநுபவிக்கச் செய்து, வர வர பக்குவம் வருவித்து, அதன் மூலம் உயர்ந்த அறிவு உதிர்க்கச் செய்து, பக்குவ அறிவிற்குத் தக்கபடி சமயங்களிற் பயிற்றுவித்து, தேர்வும் தெளிவும் பிறந்த பின், அருள் நூற்களைக் காட்டி அதன் வழி ஒழுகச் செய்து, உய்தி கூட்டும் ஒப்பற்ற முருகனது அருட்பெருங் கருணையை, **குமர குருபரர்** *போன்ற மேலவர்க்குத் தான் நயமொடு நவில இயல்கின்றது.*

இவைகளை யோதிய பின், உய்தி கூடும் நாள் என்றோ என உயங்கி,

**'ஆரவாரம் மாறாத நூல்கற் றடி நாயேன்
ஆவி சாவி யாகாமல் நீ சற் றருள்வாயே'**

என்று குமரனை யுணர்ந்து கூப்பாடு போடுகின்றது நம் உணர்வு.

**உனதடி மைந்தரன் அதனிலு முட்பட
உபய மலர்ப்பதம் அருள்வாயே.**

இன்னனமெல்லாம் துய்ப்பித்து, காட்டுவித்து, சார் வித்து, உய்தி யளித்த உமையாள் குமாரன், உயிர்களை ஊட்டுவித்து, உணர்வில் தங்கி அருள் நோக்கம் செய்யும் அற்புதத்தை அடுத்த இதழிற் காண்பம்.

பக்தியும் இசையும்

(கீழ்வேளூர் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை)

20-வது கர்த்தாவில் — ராகம் : முக்ரி

நடைபைரவியில் ஜன்யம் — தாளம் : ஆதி

இடம் : ஆறு மாத்திரை தள்ளி. பாவம் : துயர உணர்ச்சி

இலக்கணம்: வக்ர, ஷாடவ,

ஸம்பூர்ணம், ஆரோஹணத்தில் — ஆ : ஸரிமபநிதஸா

காந்தார நிஷாதம், வர்ஜ்ஜியம் — அ: ஸ்நிதபமகரிஸ

இந்த ராகத்தில் தொனிக்கும சதுஸ்ருதிதைவதம் தன் உணர்ச்சியை வலிந்து வற்புறுத்தி உணர்த்தும் தன்மை ஆகும். இம்மாதிரி இரண்டு ஸ்வர மரபாகவரும் ராகங்களைப் பாஷாங்க ராகமென்னும், இசை மரபு இலக்கணத்துள் பேசப்பட்டுள்ளது. ஆகவே இந்த ராகம், பாஷாங்க ராகமாகும்.

பல்லவி

ஸங்கீத ஶாஸ்த்ர க்ஞானமு
ஸாரூப்ய ஸௌக்யதமே மனஸா— ஸ

அனுபல்லவி

ஶ்ருங்கார ரஸாத்யகில ஸார பூரித
ஸ்ரீராம கதா நம்தாப்தி யுத—ஸ

பேர்பெரிய வேல்கொள் செங்கை முருகோனே
அந்தனுக் மயல் நாலுமுன்ற தீர்வேனே.

சரணம்

ப்ரேம பக்தி ஸுஜன வாத்ஸல்யமு
ஸ்ரீமத் ரமா வர கடாக்ஷமு
ஷேமமு நிஷ்ட யஶோதநமு கல்குனே
நேர்ப்பு கல்கு த்யாக ராஜு நேர்ச்சின—ஸ

கருத்துரை

(ஶ்ருங்கார ரஸாது அகில ஸார பூரித) ஸ்ரீ ராமச் சந்த்ரமூர்த்தியின் கல்யாண வைபவத்தை முதலாகக் கொண்ட ஶ்ருங்கார ரஸத்தை உடையதும், இன்னும் இவ்வுலக வாழ்க்கையின் மற்ற எட்டு ரஸங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு, இந்த உலகத்திற்கே ஸத்தாய் அமைந்த இந்த ரஸங்கள் ஒன்பதும் நிரம்பப்பெற்று பொங்கி வழிகின்ற, (ஸ்ரீராமகதானம்தாப்தியுத) ஸ்ரீராமச் சந்த்ரமூர்த்தியினுடைய ராமாயணக் கதையாகிய,பேரின்ப ஆனந்தமாகிய ஸமுத்திரத்தில் மூழ்கியவர்களாய் தன் மனத்தைப் பக்குவப்படுத்திக்கொண்டு, அந்த ராம கதையை மனத்துள் இருத்திய (ஸங்கீத ஶாஸ்த்ரஞானமு) இசைக் கலையின் நுண்ணிய ஒலி நயங்களையும், அதனின் நவரஸ பாவ உணர்ச்சிகளையும், இசைக்கலை இலக்கணப்படி கற்றுப் பாடி அனுபவிக்கிற இயல், இசை, உணர்ச்சி ஞானம், (ஸாரூப்ய சௌக்கியதமே மநஸா) அழியாது என்றும் நிலைத்திருக்கிற பரமாத்மாவின் உருவத்தில் திளைத்து அனுபவிக்கும் ஆனந்த சுகத்திற்கு ஒத்தது மனமே.

இன்னும் இதனால் வரும் நலங்கள் என்னவென்றால், மனமே! கேள் ; (ப்ரேம, பக்தி, ஸுஜன, வாத்ஸல்யமு) உனக்கு இவ்வுலகில் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு;

செயல் மாண்டு சித்தமவிழ நித்தத்தவம் பெறப் பகர்ந்த உபதேசம்
சிறியேன் தனக்கும் உரை செயிற்சற்றுங் குருத்துவம் குறையுமோதான்

மேலும் அவைகளிடத்தில் தெய்வீக ஸம்மந்தமான, என்
றும் நிலைத்திருக்கக்கூடிய, ஒருபோதும் குறையாத, என்
றுமே அழியாத ஆசை; இன்னும் உன்னைப்போன்று
இறைவனிடத்தில் பற்றுக்கொண் டிருக்கிறவர்களாகிய
நல்ல ஜனங்களுடைய வாத்ஸல்யம் (அதாவது அவர்க
ளுடைய ஆதரிக்கும் தன்மையாகிய கனிவுகள்; (ஸ்ரீமத்
ரமாவரகடாக்ஷமு) லக்ஷிமீகரத்தைத் தனக்கே சொந்தமாக
உடைய (ரமா) லக்ஷ்மி தேவியின் மேலான பார்வையாகிய
அருள் நோக்கமும், (நேம, நிஷ்ட, யஸோதநமு கல்குநே)
இன்னும் உலகில் தர்மா தர்மப்படி நடந்துகொள்ளும்
ஒழுக்கமும்; என்றும் எவ்விஷயங்களிலும், எக்காரியங்
களிலும், நடுநிலைமை தவறாது பயந்து நடந்துக்கொள்ளும்
சத்திய நடப்பும், இன்னும் நீ இப்படியெல்லாம் நடந்து
கொள்வதால் உலகம் உன்னைப் பார்த்து உனக்குக்
கொடுக்கும் புகழ் அதாவது கீர்த்தியும், அதனால் வரும்
நன்மார்க்க ஊதியமாகிய செல்வமும், உனக்கே சொந்த
மாகக் கிடைக்குமே. (நேர்ப்பு கல்கு) இப்படி இந்த விஷ
யங்களை இவை இவை இன்னின்ன தன்மையுடையதென
தெரிந்துகொண்டு பகுத்தறியும் அறிவாகிய, பகுத்
தறிவைப் பெற்றிருப்பவனும் ஆகிய (த்யாகராஜு நேர்ச்
சின) இந்தத் த்யாகராஜன் கற்றுக்கொண்டிருக்கிற (ஸங்
கீத ஶாஸ்த்ர ஞானமு) இசைக்கலை இலக்கண ஞானம்
(ஸாரூப்ய ஸௌக்யதமேமநஸா) இறைவனை நேரில் கண்டு
அனுபவிக்கும் சுகத்தை ஒத்தது, மனமே! என்கிறார்
த்யாக ப்ரும்மம் இசைக் கலைப் புலவர்கட்கும், மற்ற
எல்லா ஜன ஸமூகத்திற்கும.

ஆசையின் கடலுக்கே மெத்தவும்
ஆகி நின்று தவித்தே நித்தலும் அலைவேனோ.

கருத்துள்ளுரை

கேவலம் வெறும் இசை ஞானம் எதற்குமே பயன் படாததோடு, மனிதன் அடையவேண்டிய இக பர நலங்களையும் கொடுக்காது என்பதோடு, இந்த ஞானம் (முன்பு என்னால் எழுதப்பட்ட ஐயர்வாளின் கருத்துப்படி (ஸங்கீத ஞானமு பக்திவினா) நாதஸுதா ரஸம்பிலனு)போன்ற கீர்த்தனங்களில் பேசியுள்ளபடி மனித அழிவிற்கேதான் பயன்படும் என்று உபதேசிக்கிறார்.

ஆனால், நல்ல துல்லிய, நுண்ணிய, நுணுக்க, ஒலிநய, பாவ, இசை ஞானத்தோடு, ஸ்ரீ ராம கதையின் நவரஸ பாவங்களும் நிறைந்து பொங்கி வழிகின்ற ராம கதையை அறிந்து அனுபவித்து, அதனுள் திளைத்து, அதனுடன் இந்த இசை ஞானத்தைக் கலந்து பக்தி பரவசனாய்ப் பாடும் இசை இலக்கண ஞானமே இறைவனை நேரில்கண்டு அனுபவிக்கும் மோக்ஷ இன்பத்தை அனுபவிக்கும் நல்ல, உயரிய, ஆத்மானுபவ, சிறந்த, ஞானமாகும். இதை அடைவதற்கு இசைப் புலவர்காள் பாடுபடுங்கள். முயற்சி செய்யுங்கள் என்று த்யாகப்ரும்மம் உபதேசிப்பதோடு நீங்கள் இப்படி நடந்துகொள்வீர்களேயானால், உங்களுக்கு இவ்வுலகில் இன்னும் எவ்வளவோ நலங்கள் கிட்டுகின்றன என்பதையும் விளக்குகிறார் த்யாக ப்ரும்மம். அஃதாவது இவ்வுலகில் இருந்துகொண்டே இறைவனை நேரில் கண்டு அனுபவிக்கும் மோக்ஷ இன்ப சுகத்தோடு, நீங்கள் இந்த உலக எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் நினைக்கும் தன்மையால் வரும் ஆனந்த சுகமும், இன்னும் அந்த உயிர்களிடத்தில் உங்களுக்கு ஏற்படும் அன்பினால் வரும்

யோகச்ச மாதி கொண்டு மோகப்ப சாக மண்டு
லோகத்தில் மாப்வ தென்று மொழியாதோ.

கருணை சுகமும், நீங்கள் இப்படி இருப்பதைக் கண்டு உங்கள் போன்று இவ்வுலகில் உள்ள மற்ற பெரியோர்களுடைய ஆதரவு தன்மையின் நலச் சுகமும், உங்களுக்கு இவ்வளவு சுகமும் கிட்டியதைக் கண்ட கருணையே குணமாகக்கொண்ட ஸ்ரீ லக்ஷ்மிதேவியின் கடாக்ஷ வீக்ஷண்யமும், மேலும் தர்மா தர்மப்படி நடந்துகொள்வதால் வரும் ஒழுக்க சுகமும், நாம் ஆண்டவன் சந்நிதானத்தில் இருக்கின்றோம், எந்தத் தவறையோ ந்யாயா ந்யாய வரம்பிற்கோ தவறி நடக்கக்கூடாதென்ற, தராசுகோல் போன்ற, நடுநிலைமையாகிய நெறிதவறாத நடுவு நிலைமைப்படி பயந்து நடந்துகொள்கிற உத்தம நடப்பால் வரும் சத்திய நடப்பின் சுகமும், இன்னும் நீங்கள் இப்படி நடந்துகொள்கிறீர்களே என்று இந்த உலக மக்கள் உங்களைக் கண்டு மரியாதைசெய்து அவர்களால் கொடுக்கப்படும் ஸ்ரேயஸ் ஆகிய கீர்த்தியால் வரும் சுகமும், இன்னும் மற்றும் இவ்வுலகிற்கு வேண்டிய எல்லாச் செல்வங்களையும் உங்களுக்கே ஸர்வ சொந்தமாக ஆக்கி உங்களைப்பரசுகத்தில் ஆழ்த்தும், என்று த்யாக ப்ரும்மம் வெறும் இசைஞானம் பயனில்லை, இசை ஞானத்தோடு, தெய்வீக நம்பிக்கையும் அவனது கீர்த்தியில் ஆசையும், அவனுடைய கல்யாண குணங்களில் பற்றும், உடையவர்களாய் இருந்து, ஸதா அவனையே நினைந்து நினைந்து உருகி, பக்திகொண்டு இந்த பக்தியோடு கலந்த இசையை இணைத்துப் பாடி பரம சுகம் அடைய வேண்டுமென்கிறார்.

முகாரி ராகத்தில் இந்தக் கருத்தை இணைத்ததின் உணர்ச்சிப் பொருத்தத் தத்துவம்.

அசட்டால் மூடுகின்ற மசக்கால் மாயு மீந்த
அவத்தா லீன மின்றி வருவாயே.

இந்தராகம் துயரத்தை குறிக்கும் ஒலிநய இலக்கணச் சேர்க்கையாகும். த்யாக ப்ருமம் உலகிலேயே இசை ஞானத்தோடு மனிதர்கள் தோன்றுவதே மிக மிக அரிது, அதிலும் இந்த இசை அறிவை பக்திப் பாதைக்குப் பயன் படுத்தாது வீணே காமாதி காரியங்கட்கும் இன்னும் ஏதேதோ காரியங்கட்கும் பயன்படுத்திப் பாழ்படுகின்றார்களே என்று மிகவும் வருந்தி துயருற்று, அத்துயரத்தோடேயே இங்கு பேசுகிறார்.

குறிப்பு

அமிர்தவசனியில் என்னால் எழுதப்பட்ட ஐயர்வாள் கீர்த்தனத்தில் இதே விஷயத்தைத்தான் எழுதியுள்ளேன். ஆனால் அந்த ராகம் வேறு. அந்த ராகத்தில் இதே விஷயத்தைப் பேசியதின் தத்துவம் : மக்கள் இப்படிக் கெட்டுப் போகின்றார்களே என்ற வருத்தத்தினால் கோபமாகப் பேசினார். இதே விஷயத்தை அடுத்த இதழில் எழுதப் பட்டுள்ள ராகம் வேறு. இந்த ராகத்தில் இதே விஷயத்தைப் பேசியிருப்பதின் தத்துவம், மறுபடியும் த்யாக ப்ருமமம் மனந் தளராது மக்கள் இப்படிப் பாழ்படுகின்றார்களே என்று வருந்தி, கோபித்தும் பயனில்லையே என்று நொந்து மிகவும் அன்பாகத் தன் வருத்தம் தொனிக்கப் பேசினார். தற்போது இதே விஷயத்தைப் பேசி இருக்கும் ராகம் வேறு. இதன் தத்துவம் : தன்னையே நொந்துகொண்டு இவ்வுலக மக்கள் எந்த முறையில் எடுத்துச் சொன்னாலும் செவி சாய்க்கேன் என்கிறார்களே என்று மிகவும வருந்தி ஒரே துக்கக் க்ராந்தராய் மிகவும் துயருற்றவராய் விசனித்துப் பேசுகிறார்.

பாசத் தேனைத் தேகற் குர்பொற்
பாதத் தேவைத் தருவ்வாயே.

ஆகவே ஒரு விஷயத்தை முதலில், கோபமாகவும், கேட்காவிட்டால் அதே விஷயத்தை, அன்பாகவும், அதிலும் பயன்படாவிட்டால் நம்மை நாம் நொந்துகொண்டு வருத்தப்படவும் செய்கின்றோம் என்னும் இயற்கைத் தத்துவத்தின்படி த்யாகப்ருமம்மம் உலகிற்கு இயல், இசை, உணர்ச்சி, பாவ, இயற்கை, நியதி தத்துவப்படிப் போதித்து உணர்த்துகிறார். இந் நய தெய்வீக அருமையை உணர்ந்து நாம் நல்வழிப்பட்டு உண்மையான சுகத்தை அடைய வேண்டுமென்ற கவலையேதான் த்யாகப்ருமமத்தின் நோக்கமேயாகும். அறியவும்.

குறிப்பு

இசைக்கலை பக்தி மார்க்கத்திற்கே அன்றி மற்ற காரியங்கட்குப் பயன்படக் கூடாதென்பதே த்யாகப்ருமமத்தின் அரிய உபதேசமும் ஆகும்.

இயற்கை யோடியைந்த இன்பம்.

(வடிவேல் பிள்ளை)

உலகில் காணப்படும் ஒவ்வோர் இயற்கைப் பொருளையும் அறிவுத்துணை கொண்டு ஆராய்ந்து நோக்குங்கால் அதனுட் பொதிந்து கிடக்கும் ஓர் முதற் பொருளை உணர்தல் கூடும். அம் முதற் பொருள் எது? முதற் பொருள் இறைவன். இறைவன் உயிர்; இயற்கை உடல். இறைவன் இல்லாத இயற்கைக் கூறே இவ்வுலகில் இல்லை. இறைவன் இயற்கையின் உள்ளும் புறமும் நீக்கமற நிறைந்து நிற்கிறான். எல்லாம் கடந்த இறைவன் மனம் வாக்குக் காயங்

வானோர் கால்விலங்கு களைத் தரித்த பெருமானே
ஆறிரண்டு புயத்தணைக்க வருவாயே.

களுக்கு எட்டாதவன். மனம் வாக்குக் காயங்களுக்கு எட்டாத ஒருவனை எவ்வாறு எழுதிக் காட்டுவது? இயற்கையை உடலாகக் கொண்டுதான் உயிராக நிற்கும் இறைவனை, உன்னி உன்னி உணர்தல் வேண்டும்.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞான சம்பந்தர் ஆண்டு ஒரு மூன்றில் அம்மை அளித்த ஞானப் பாலையுண்டு நாடோறும் நற்றமிழ்ப் பதிகம்பாடி நம்பனை வழிபட்டு நல்லருள் பெற்றார்.

இவ்வாறு இன்னிசையால் இசைத் தமிழை இவ்விரு நிலத்திற் பரப்பி இறைவன் அருள் பெற்ற இசைவாணர் இயற்கையிலும் ஈடுபட்டு இயற்கை வாயிலாக இறைவனைக் கண்டு கண்டு திளைப்பாராயினர்.

செப்பரிய தண்டமிழால் ஒப்பரிய பாடல் புனைந்த உத்தமர் தாம் அவதரித்த திருக்கழுமலத்தில் உள்ள ஓர் சுனையைக் கண்ணுற்றார். சுனையோ நீரும் பூவும் நிறைந்திருந்தது. பூக் கைக் கொண்டு அரன் பொன்னடி போற்றும் புண்ணியர்களுக்குப் பயன்படும்வகையில் கரை ஓரங்களில் காண்போர் கருத்தைக் கவருமாறு நன்றாகப் பல மலர்கள் பூத்திருந்தன. அதை அடுத்துப் பல மாமரங்கள் செழித்துத் தழைத்துக் காய்த்துக் குலையாய்த் தொங்கின. சுனையில் பல பறவைகள் இறை தேடி இன்புற்று இருமாந்திருந்தன. இவைகளைக் கண்ட கவுணியர் கோன் உள்ளம் களி கூர்ந்தது. சிவ நெறியே சிந்திக்கும் சிவ ஞானம் உடையவர் ஆதலால் பவ மதனைப் போக்கும் தவ முதல்வரை இதனோடு ஈடுபடுத்துவாராயினர்.

வேதா போதா வேளா பாலா வீரா வீரப் பெருமானே
வாடா நீ பத் தொடைதாராய்,

நீரும் நிழலும், மலரும் மணமும், தடமும் இடமும், கண்ட தவசிகள் நீராடி முன்னவனை வழிபடுதற்கு மொட்டறு மலர் பறித்தனர். செழித்துத் தழைத்த செடியை வளைத்துப் பறித்து விடும்போது அது விசையாற் சென்று அதன் மேல் உள்ள மாமரக் குலையில் தாக்கிற்று. குலையில் உள்ள காய்கள் சுனையில் வீழ்ந்தன. சுனையில் இருந்த பறவைகள் தம்மைக் கவர்வதற்கு யாரோ கவண் கல் வீசுகின்றனர் என்று கருதிப் பறந்து போயின என்று காழி நகர்க் கலைஞான சம்பந்தர் கூறும் கற்பனை, கற்போர் கருத்தைக் கவர்வதாகும்.

> "தவ முயல்வோர் மலர் பறிப்பத்தாழவிடு
> கொம் புதைப்பக் கொக்கின் காய்கள்
> கவண் எறி கல் போல் சுனையில்
> கரை சேரப்புள் இரியும் கழுமலமே."
>
> (தேவாரம்— சம்பந்தர்.)

செந்தமிழ் வல்ல பைந்தமிழாளர் திருவீழி மிழலைக்குச் சென்றார். ஆனால் அவர் சென்ற காலமோ வாசி தீரவே காசு பெற்ற வறண்ட காலமல்ல. நல்ல நிலவளமும் பல வளனும் நிறைந்த நன்செய்களில் சிறந்த செந்நெல் லும், அதைஅடுத்து இடையிடையே உள்ள சிறு சிறு குட்டைகளில் செந்தாமரையும் சிறப்புற்று விளங்கின. குட்டைகளில் நற்றாமரையும் குடைத்தாமரையும் நலமுற்றுத் திகழ்ந்தன. செந்தாமரைப் பூவையும், அதற்குச் சிறிது மேலே ஓங்கிவளர்ந்து குவிந்து நிற்கின்ற குடைத் தாமரையையும் அழகிற் சிறந்த ஓர் அன்னங் கண்டது. அன்னம் மலரில் அமர்ந்து நிழலில் இருந்தது. அருகில்

பார்மிசையி லேயு முன்று பாழ்நரகெய் தாம லொன்று
பாதமலர் சேர அன்பு தருவாயே.

முற்றி முதிர்ந்த செங் நெற் கதிர்கள் காற்றால் அலைப்புண்டு அன்னத்தின் இருமருங்கும் அசைத்தன.

இக் காட்சி கவுணியர் உள்ளத்தைக் கவர்ந்தது. அரசனது கொலு மண்டபமாக அமைத்துக் காட்டுகின்றார். செந்தாமரையாகிய சிம்மாசனத்தில் அன்னமாகிய அரசன் குடைத்தாமரையாகிய குடையின் கீழ் செங்நெற் கதிர்களாகிய சாமரங்கள் இருமருங்கும் வீச இறுமாந்திருப்பதாக இணைத்துக் கூறுகின்றார்.

"செறி யிதழ்த் தாமரைத் தவிசில் சிறந்தோங்கும்
இலைக் குடைக் கீழ் செய்யார் செங் நெல்,
வெறி கதிர்ச் சாமரை யிரட்ட இள அன்னம்
வீற் றிருக்கும் மிழலை யாமே."

(தே — சம்பந்தர்.)

நல்லிசையாளராய ஞான சம்பந்தர், ஒரு நாள் காலையும் மாலையுந் தோன்றா ஓர் சோலைக்குச் சென்றார். சென்ற நேரமோ மாலைக் காலம். சோலையோ வானைநோக்கி வளர்ந்திருந்தது. சோலையில் மேகங்கள் சூழ்ந்திருந்தன. மேகங்கள் முழங்கின. காரைக் கண்டு களித்த கானமயில் கலாபத்தை விரித்து ஆடத் தொடங்கின அருகில் இருந்த பொன் போன்ற பூக்களையுடைய கொன்றையோ மெல்லிய காற்றால் அலைப்புண்டு மலர்களைச் சொரிந்தன. அந்தக் கொன்றை மரத்தின் கீழ் பெண்களின் கைகள் போல் பூத்து நின்ற காந்தள் மலர்களிலே அக் கொன்றைப் பூக்கள் சென்று சேர்ந்தன.

இவைகளைக் கண்ட புகலிப் பிள்ளையாரின் உள்ளம் பூரித்தது; நாட்டியக் கலையை நாடிற்று, நடன சபையாக

போகமதி லேயுழன்று பாழ் நரகெய் தாமலுன்றன்
பூவடிகள் சேர அன்பு தருவாயே.

உருவகிக்கின்றார். நடன சபைக்கு நாட்டியப் பெண்கள் வேண்டும், முழவு முதலிய இன்னிசைத் துணைக் கருவிகள் வேண்டும், துணைப் பாடகர் வேண்டும், அனைத்தையும் கேட்டு மகிழும் அவையோர் வேண்டும், நாட்டியப் பெண்களுக்கு வரையாது அளிக்கும் வள்ளல் வேண்டும், அவைகளை நாட்டியப் பெண்கள் தம் இரு கைகளாலும் ஏற்றுப் போற்ற வேண்டும். இங்கே நாட்டிய அரங்கை எவ்வாறு அமைக்கின்றார் பார்ப்போம்

முகில்கள் முழவு முதலிய துணைக் கருவிகள் போல் ஒலித்தன. மயில்கள் நாட்டியப் பெண்களைப் போல் தோகையை விரித்து ஆடின; வண்டுகள் துணைப் பாடகர்களைப் போல் ரீங்காரம் செய்தன: நீர் நிலைகளில் உள்ள கருங்குவளை மலர்கள் காண்பவர்களின் கண்களைப் போல் காணப்பட்டன; கொன்றைமரமோ வரையாது அளிக்கும் வள்ளல்களைப் போல மலர்களாகிய பொன்னைச் சொரிந்தன. அம்மரத்தின் கீழ் உள்ள காந்தள் மலர்களோ பொன்னைப் பெற்றுக் கொள்ளும பெண்களின் கைகளைப் போல விரிந்து நின்றன.

"வரைச் சேரும் முகில் முழவ மயில்கள் பல
நடமாட வண்டு பாட
விரைச் சேர் பொன் இதழி தர மென் காந்தள்
கையேற்கும் மிழலை யாமே."

இவ்வாறு ஆளுடைய பிள்ளையின் அருட் பாடல்களில் திகழ்வன பற்பல: அவைகளில் இவை ஒரு சில.

கடிம லர்ப்பத மனுகு தத்கதி
விலன் பொங்கும்பெ ரும்பா தக்கே ஆருவையோ.

கம்பன் விளம்பும் விருதி

(V. ராமன், கூனூர்)

இப்போது நடப்பது விருதியாண்டு. விருதியாண்டினில், விருதி என்ற ஆண்டின் பொருளும், பெயர்க் காரணமும் அறிந்தின்புற வேண்டுவனவே. விக்ருதி-விகிர்தி-விகிருதி என்று தற்சம தற்பவச் சொற்களாக விக்ருதி என்ற ஸம்ஸ்கிருதச் சொல் வடசொற்களாகின்றது. விருதி என்பது முற்றிலும் தற்பவமான வட சொல். விகிர்தி வருஷம் என்பது வடமொழிப்பற்றுக் கொண்ட தமிழர் வழக்கம். விருதி யாண்டென்பது சிறிது வடமொழிப் பற்றுக் கொண்ட தமிழர் வழக்கம்.

விருதி—என்ற இவ்வடசொல்லைக் காளிதாச மகாகவி யாத்ருச்சிகம் என்ற பொருளில் எடுத்தாளுகிறார். அவர் எடுத்தாளும் இடம், "உயிர்கட்கு இறப்பு என்பதுஇயல்பு. வாழ்வு என்பது யாத்ருச்சிகம் என்பதாக இபபொருள் புலவர்களால் சொல்லப்படுகிறது" என்று பொருள் தருகின்ற "மரணம் பிரக்ருதி: சரீரிணும் விக்ருதி: ஜீவிதம் உச்யதே புதை:என்ற சுலோகம். யாத்ருச்சிகம் என்ற சொல்,தற்செயலாக நிகழ்வது, எதிர்பாராமல் வேண்டியது கிடைப்பது, எதிர்பாராமல் கிடைக்காததான வஸ்துவின் பேறு, என்று பொருளொன்றையே பலவிதங்களாக் குறிக்கும். யாத்ருச்சமாகத் தங்கள் தரிசனம் லபித்ததுஎன்ற வழக்கையும் காண்க மேலுங் காளிதாஸன் ஒன்று சொல்கிறான்;இம்மனிதன் ஒருநொடி யாவது மூச்சுடனிருப்பானேயானல் அவன் யாத்ருச்சிக ஜீவித பரமலாபம் பெற்றவனே என்பது தான அது. நாம் வேண்டுவதும் பல விக்ருதி வருஷங்கள் காணவேண்டும் என்பதுவே. சமீபத்தில் ஸ்ரீ ரமண மகரிஷிகளுங் காலமானர். அது அற்புத மாயையின் சுபாவம் மரணம் இயற்கையே. வாழ்வு யாத்ருச்

யான்மயல் மூழ்கி நின்ற யராதே

நூபுர பாத பங்கய மீதே யான்வது கருதாயோ.

கிகம். கிடைத்தவளவு லாபமென்று எண்ணி மகிழ வேண்டும். ஆகவே இவ் விகுதியாண்டு யாத்ருச்சிகம் எனப் பொருள் தந்தது.

"வேண்டி நீ யாதருள் செய்தாய் (செய்வாய்)
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசு ஒன்றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே"

என்ற தமிழ் மறையாம் மணிமொழியாரது திருவாசகத்தை எண்ணியெண்ணி இன்புற்றிருக்கச் செய்கின்றது.

நம் கம்ப மாமுனிவர் தம் உபநிடதமாகிய கம்பராமாயணத்தில்-தமிழருக்கு ஞானோபதேசஞ் செய்கிறார். பிரக்லாதன் இரணியனுக்குச் சொல்வதாகச் செவியறிவுறாவுச் செய்கிறார். "வம்பப்பரத்தனும் கம்பன். அவன் ஒரு தாசிலோலன்" என்று கற்றை பலபல கடிதின் அச்சிட்டுக் கம்பு-அ-ரசக் கஷாயத்தைப் பருகச் செய்வோர் வேப்பிலை தின்றாரென வாய்களைக் கோணல்களுற வைத்துக் கொள்ளட்டும் நம்மனைவருக்கும் பரம மகரிஷியே யாவர் கம்பர், பரம மாதவரேயாவர். பரமாசாரியரேயாவர். உலக ஜகத் குரு சுவாமிகளாவர். அவர் கடவுளைப்பற்றி எடுக்கும்போதே அகங்காரிகள் மண்டையில் ஓரடி அடித்து அமர்த்திவிடுகிறார்.

களிமண் மூளைக்குக் கடவுள் தெரியவருவாரா? என்கிறார். தெரியமாட்டார் அக் கயவர்க்கு அக் கடவுள் என்று அறைகின்றார்.

" புகுதியில்லாதவர் புலத்திற்குருமோ "

புகுதி = புத்தி. புலம் = அறியும் அறிவு,

கடவுள், மூலப் பிரகிருதியிலிருந்து பயனுன இவ்வுலகத்தை உண்டாக்கியது. இது முதல் மகா வாக்கியம்.
" பகுதியின் உட்பயன் பயந்தது."

பிரச்னோபநிடதத்தில் சொல்லப்பட்ட 1. பிராணன் 2. சிரத்தை, (faith) 3. ஆகாயம், 4. காற்று, 5. நெருப்பு,

---

நாளது தினந்தினமு மேற்கொண்ட வேகிருபை
நாடியருளேயருள வருவாயே.

6. நீர், 7. மண், 8. பொறிகள், 9. மனம், 10. உண்டி 11. வீரியம், 12. தவம், 13. மந்திரம், 14. வேலை, 15. உலகம், 16. பெயர் என்ற இப் பாகுபாடுகொண்ட ஷோடச கலைகளும், முண்டகோபநிடதத்தில் சொல்லப்பட்ட அன்னம், பிராணன், மனம், ஸத்யம், உலகம், வேலை, பெயர், உருவம், என்ற இப் பொருள்களும், இனைய பிறவும் யாவுமே, அக் கடவுளின் மாயையின் யாத்ருச்சிகத் தோற்றத்தின் தொகுதிகளாகும், என்பது இரண்டாவது மகாவாக்கியம்.

மேலவர் வகுதியின் வயத்தன எவையும்,
அன்னதின் விகுதியின் மிகுதிகள்.

வகுதி = வகுப்புக்கள். மேலவர் = பரம இருடியர். விகுதி = யாத்ருச்சிகத் தோற்றம். மிகுதி = தொகுதி.

அக்கடவுள் கருமவசத்தால் இவ்வுலகில் பிறக்காதது. இதுமூன்றுவது மகா வாக்கியம்.

"வரவு போக்கது."

இம்மூன்று மகா வாக்கியமும் கொண்ட:

பகுதியி னுட்பயன் பயந்த தன்னதின்
விகுதியின் மிகுதிகள் எவையும் மேலவர்
வகுதியின் வயத்தன வரவு போக்கது
புகுதியில்லாதவர் புலத்திற்குமோ

என்ற இப்பாசுரத்தில் கம்பர், காளிதாஸன் ஆண்டதுபோலவும், சுவேதாச்வதரோபநிஷத்தில், "கால: சுவபாவோ நியதி: யத்ருச்சா(Chance) பூதாநி யோநி: புருஷ இதி சிந்த்யம்" என்றுள்ளவாறும், விகுதி என்ற சொல்லை யாத்ருச்சிகத் தோற்றம் என்ற பொருளில் ஆண்டிருப்பது அகமகிழ்தற் குரியது. எதிர்பாராமல்—கிடைக்காததான உத்தம வஸ்துவின் லாபம் பெறுதல் என்ற பொருளை விக்ருதி ஆண்டு கினைவுறுத்தி அமிர்தமேயான அப் பரம் பொருளை அடையவுஞ் செய்கிறது. விக்ருதி வருஷத்தில் பலருக்கும் பல யத்ருச்சா விசேஷ சம்பவங்கள் நன்மைக்கு உண்டாகலாம் என வையகம் வாழ முழங்குவது நன்று.

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலை' நஞ்சன்கூடு

யாவருக்கும்

I.D.L.21 ஸ்வாஸ்கோ இருமல், காசம் சுவாச வியாதிக்கு
I.D.L.72 ஹார்டோன் ஹிருதய வலி, மயக்கம், துடிப்புக்கு
I.D.L.75 டீப்சன் ஜீரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் எல்வித ஜ்வரங்களுக்கும்

மாதர்களுக்கு

I.D.L.71 ப்ரீமெலக்ஸ் ரக்த, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெனு பலஹீனம் மயக்கத்திற்கு
I.D.L.81 ப்ரதமென்ஸ் ருதுக உபாதைக்கு
I.D.L.91 யூடிரால் கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனவெல் ஜீர்ண விருத்திக்கு

குழந்தைகளுக்கு

I.D.L.12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
I.D.L.18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
I.D.L.31 சிசுராக் ஜீர்ண டானிக்

அவசிய தின உதவிகள்

"நஞ்சன்கூடு பல்பொடி" I.D.L.61 (மெடிகேடட்)
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் உஷ்ணம், சனை தைலம்
I.D.L.55 ஜீஞ்சிப் அஜீர்ணம், பித்த சமனி
'யூனிகான்' சுத்த தேன்

தபால் வில்லையும், தங்கள் விலாசமுள்ள கவருடன் வியாதி விபரம் எழுதி, எங்கள் வைத்தியசாலை தபால்மூலம் சிகிச்சை பெறவும்
ஸோல் ஏஜெண்டுகள்
யுனைடெட் கன்ஸர்ன்
54, பந்தர் தெரு :: மதராஸ், 1

"வாயார வாழ்த்தி மகிழ்ந்து
உனைத்தான் போற்றுமல்
காயமெடுத்துக்
கலங்கினேன் பூரணமே"
(பட்டினத்தார்)

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

ஷண்முகம் பிராண்டு
ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக

உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்
341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம் : 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவனி மூல வீதி - மதுரை.
Tel :—"FAITH' Estd : - 1924 Phone :—113

வியாபாரக்குறி
N. K. M.
தங்கநாடா

நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு, நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.



கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
55. கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road Madras—18
Edited & Published by S. Muthuswamy, 54. Bunder St., Madras.